பக்கங்கள் 16

மாலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | தை 03 | புதன்கிழமை | 17.01.2024 | அதிர்வு 169

## பெப்ரவரி 5 இல் பாடசாலைகள் மீளவும் ஆரம்பம்

**விடுமுறை தினங்கள் நீடிப்பு**

அரச மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் 04



# துமிந்தவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு தள்ளுபடி

## கோட்டாபயவின் உத்தரவை நிராகரித்தது உயர்நீதிமன்று



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானம் தன்னிச்சையானது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. அத்துடன், குறித்த தீர்மானம் சட்டத்துக்குப் புறம்பானது என்றும் தீர்ப்பளித்துள்ளது. 04

# இலங்கை சரித்திரத்திலேயே பதிவாகிய முதலாவது தீர்ப்பை வரவேற்கின்றோம்

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு



“இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய பொதுமன்னிப்பு செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம்.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணை ஒன்றுக்காக இன்று வருகை தந்திருந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, துமிந்த சில்வாவுக்குக் கொடுத்த பொது மன்னிப்பைப் புறந்தள்ளி அது தவறாகச் சட்டவிரோதமாகக் கொடுக்கப்பட்ட பொது மன்னிப்பு என்றும், அது செல்லுபடியற்றது என்றும் உயர்நீதிமன்றம் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# ‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற பொங்கு தமிழில் தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# மஸ்கெலியா தோட்டத்தில் பொறியில் சிக்கிய சிறுத்தை

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் மஸ்கெலியா தோட்ட முகாமையாளர் மாளிகைக்கு அருகில் உள்ள வேலிப் பகுதியில் இனந்தெரியாதோர் இட்ட வலையில் சிறுத்தை ஒன்று சிக்கியுள்ளது.

இதைக் கண்ட தோட்ட பங்களா தோட்டத் தொழிலாளி உடனடியாக நிர்வாக அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

நிர்வாக அதிகாரி நல்லதண்ணி வனப் பாதுகாப்பு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அதைத் தொடர்ந்து நல்லதண்ணி வனப் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த இடத்துக்கு வருகை சிறுத்தையை மீட்டனர் என்று மஸ்கெலியா தோட்ட காரியாலய அதிகாரி தெரிவித்தார்.

## மன்னாரில் வீடொன்றில் இருந்து

# போதை மாத்திரைகளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார், தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் நேற்று மாலை குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான வகையில் சிலர் தங்கியிருக்கின்றனர் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பிரதேச பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அந்த வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது வீட்டில் இருந்து 520 சட்டவிரோத போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது இந்தியாவில் இருந்து கடல் வழியாகப் போதை மாத்திரைகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேற்படி நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# திரவப் பெட்ரோலிய எரிவாயு இறக்குமதிக்கு 1,139 பில்லியன் ரூபா கூடுதல் செலவாகிறது

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின்படி, அதிக விலைக்கு திரவ பெட்ரோலிய எரிவாயுவை இறக்குமதி செய்வதன் மூலம் ஆயிரத்து 139 பில்லியன் ரூபா கூடுதல் செலவை அரசு ஏற்க வேண்டியுள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ எரிவாயு லங்கா லிமிடெட் நிறுவனத்தால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு கொள்வனவு தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

குறைந்த விலைக்கு எரிவாயுவை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதியளித்துள்ள போதிலும், அதிக விலைக்கு எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான புதிய கொள்வனவு நடவடிக்கையை ஆரம்பிக்க நடவடிக்கை



எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவைக் கொள்வனவு செய்வதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பில்லியன் டொலர்களில், லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட 120 மில்லியன் டொலர் மானியம் பயன்படுத்தப்படவில்லை என்று கணக்காய்வு அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கை...

தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை சம்பந்தமாக மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்ட துமிந்த சில்வாவுக்கே இந்தத் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பிலே நான் ஆஜராகி இருந்து இந்த வழக்கை வாதாடி இருக்கின்றேன்.

இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதி ஒருவருடைய பொதுமன்னிப்பு செல்லுபடியற்றது என்று உயர்நீதிமன்றம்தீர்ப்பளித்துள்ளது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம். வேறு சில வழக்குகளும் நிலுவையிலே இருக்கின்றன.

விசேடமாக மிருசுவில் படுகொலையாளி சுனில் ரட்நாயக்கவுக்குக் கொடுத்த பொதுமன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்தத் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை." – என்றார்.

### பெப்ரவரி 5 இல்...

தவணையின் இரண்டாம் கட்ட அட்டவணையை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் தவணையின் இரண்டாம் கட்டம் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் தவணையின் இரண்டாம் கட்டத்தை 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கக் கல்வி அமைச்சு முதலில் தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும், தற்போது நடைபெற்று வரும் 2023 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளின் விவசாய விஞ்ஞான வினாத்தாளை 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி மீள் நடத்துவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் எடுத்த தீர்மானத்தின் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

விவசாய விஞ்ஞான பாடத்தின் 1 மற்றும் 2 ஆகிய இரு வினாத்தாள்களும் பரீட்சைக்கு முன்னதாக சமூக வலைதளங்களில் கசிந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து அந்த இரு வினாத்தாள்களையும் ரீட்சைகள் திணைக்களம் இரத்துச் செய்தது.

வினாத்தாள் கசிவு தொடர்பில் ஆசிரியர் ஒருவரும், பாடசாலை உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### துமிந்தவுக்கு...

இதன்படி, துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை இரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய குழாம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், துமிந்த சில்வா தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட மேலும் நால்வருக்கு 2016 ஆம் ஆண்டு மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் – பார்' நீதிமன்றம் 2 –1 ஆகப் பிரிந்து மரணதண்டனைத் தீர்ப்பை வழங்கியது.

2018 ஒக்டோபரில் இந்தத் தீர்ப்புத் தொடர்பான மேன்முறையீட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐவரில் ஒருவரை விடுவித்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம், துமிந்த சில்வா உட்பட ஏனைய நால்வரின் மரணதண்டனைத் தீர்ப்பையும் ஏகமனதாக உறுதி செய்தது.

இருப்பினும், 2019 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் 2021 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இந்தப் பொதுமன்னிப்பின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்குட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர, மனைவி சுமணா பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கஸாலி ஹுசைன் ஆகியோரினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஹிருணிகா பிரேமச்சந்திரவின் மனு முதலில் விசாரிக்கப்பட்டது. அந்த மனு சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதாடியிருந்தார்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம், துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக்கு இடைக்காலத் தடை விதித்தது. இதனால் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருந்த துமிந்த சில்வா மீண்டும் கைதாகி மரணதண்டனைக் கைதிகளுக்கான சிறையில் மீண்டும் அடைக்கப்பட்டார்.

அந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு இன்று வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டே துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்று இந்த வழக்கையொட்டி கோட்டாபய ராஜபக்ஷ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதை ஏற்க முடியாது என்று நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமன்னிப்பை வழங்கிய வேளை கோட்டாபய உரிய நடைமுறைகளை – சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை என்றும் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

"துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்கிய வேளை தேசத்தின் நலனைக் கருத்தில் எடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். அவர் தேசத்தின் எந்த நலனைக் கருத்தில் எடுத்துள்ளார்?

இரண்டு தரப்பினர் இது குறித்து தெளிவுபடுத்தலாம்.

முதலாவது – முன்னாள் ஜனாதிபதியே தேசத்தின் நலன்கள் என்னவென்பதைத் தெரிவிக்கலாம். இது தொடர்பில் தனது சத்தியக் கடதாசியில் அவர் தெரிவித்துள்ள கருத்தின் விளக்கம் யாது என்பது அவருக்கே தெரியும்.

இரண்டாவது – ஜனாதிபதியின் ஆவணம் ஜனாதிபதி தனது பதவியைத் துறந்த பின்னரும் ஜனாதிபதி செயலகத்திலேயே இருந்திருக்கும்.

சட்டமா அதிபரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எவையும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பை வழங்குவதற்கான காரணம் அதுதான் என்பதைச் சுட்டிக்காட்டவில்லை.

இந்த விடயத்தில் அடிப்படைக் காரணத்தைக் கூட கண்டறிய முடியாமலுள்ளது. எனவே, முன்னாள் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை அவராலும் அவரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களாலும் உறுதிப்படுத்த – நியாயப்படுத்த முடியவில்லை.

தேசத்தின் நலனைக் கருத்தில் கொண்டே குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பொதுமன்னிப்பை முன்னாள் ஜனாதிபதி வழங்கினார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு பொதுமன்னிப்பை வழங்கிய வேளை முன்னாள் ஜனாதிபதி உரிய நடைமுறைகளைப் பின்பற்றவில்லை.

சட்டமாஅதிபரின்ஆலோசனைகளைப் பின்பற்றுவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதன் காரணமாக சட்டம் அவர் எந்த விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதனை அவர் கருத்தில் கொள்ளவில்லை.

இதனால் முன்னாள் ஜனாதிபதி இந்த விடயத்தில் தனது விருப்புரிமையைச் சரியாகப் பயன்படுத்தினார் என்று தெரிவிக்க முடியாது." – என்று நீதியரசர்கள் குறிப்பிட்டுள்ளனர்.




# வரி அதிகரிப்பின்றி பொருள்களை மக்களுக்கு வழங்க சதொச முடிவு!

வற் வரி அதிகரிப்பின்றி பொருள் களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை மக்களுக்கு வழங்க லங்கா சதொச தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற் படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு அமைய 2024 இல் அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக பெறுமதி சேர் வரி 15 சதவீதத்திலில் இருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதன் அடிப்படையில், சேவை மற் றும் விநியோகத்துக்கான பெறுமதி சேர் வரி 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வற் வரி அதி கரிப்பின்றி அதிகளவான பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு லங்கா சதொச நிறுவனம் வழங்கவுள்ளது.

அதன் அடிப்படையில், வாடிக்கையா ளர்களுக்கு சவர்க்காரம், கொலோன், பவுடர், பிஸ்கட் மற்றும் குழந்தைகளுக் குத் தேவையான பல பொருள்களை வற் இன்றிப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சதொச தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக லங்கா சதொச நிறுவனத்திடம் இருந்து பல அத்தியா வசியப் பொருள்களை நடைமுறையில் உள்ள சந்தை விலைகளை விட மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள் ளும் வாய்ப்பும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவ னம் மேலும் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத கட்டடங்களை இடம்மாற்ற நடவடிக்கை!

## கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான கட்டடங்களை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் கால்வாய்களை அடைத்து சுமார் 500 சட்ட விரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்களை வேறு இடத்துக்கு மாற்றுவதற்குக் கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறான பல நிர்மாணங்கள் நீரின் ஓட்டத்தை தடை செய்துள்ளன. இதனால் கொழும்பு நகரில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. சில குடியிருப்புகள் நேரடியாக நீர் வழிக ளைத் தடுக்கின்றன. மற்றவைகால் வாய்ப் படுகைகளில் கட்டப்பட்டுள்ளன.- என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் வழக்கு

இலங்கையின் சட்டச் சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்று இன்று முற்பகலில் வழங்கப்பட்டிருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவரின் விசேட அதிகாரங்கள் சம்பந்தமாக தொடரப்பட்ட ஒரு வழக்கில், அந்த அதிகாரங்களைக் கேள்விக்கு உட்படுத்தி, அவை கட்டுமட்டில்லாமல் வழங்கப்படவில்லை, ஒரு வரயறைக்குள் வழங்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தி, ஓர் அதிரடித் தீர்ப்பை உயர்நீதிமன்றம் இன்று வழங்கியுள்ளது.

'ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர, மிகுதி எல்லா அதிகாரங்களும் எனக்கு உள்ளது' என்ற சாரப்பட இந்த ஜனாதிபதி பதவிக்கு 1978 ஆம் ஆண்டு முதன் முதலில் வந்த போது முதலாவது நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறியிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

அப்படி இல்லை என்பதை இந்தத் தீர்ப்பு மூலம் குட்டுப் போட்டு உரைப்பது போல உறைப்பாக உணர்த்தியிருக்கின்றது உயர் நீதிமன்றம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை விலக்கி, அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த உத்தரவையே உயர் நீதிமன்றம் சட்ட ரீதியாக ரத்து செய்து இந்த வரலாற்றுத் திருப்புமுனைத் தீர்ப்பை வழங்கி இருக்கின்றது. தண்டனை விதிக்கப்பட்ட எந்த கைதிக்கும் ஜனாதிபதி தன் தற்றுணிவுப்படி மன்னிப்பு வழங்கலாம், அதற்கான அதிகாரம் கேள்விக்கு உட்படுத்த முடியாத வகையில் அவருக்கு உண்டு என்ற சாரப்படவே இவ்விடயம் தொடர்பான ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் கருதப்பட்டு வந்தது. ஆனால் அந்தக் கருத்து நிலைப்பாடு தவறானது, அத்தகைய பொது மன்னிப்பு வழங்கலில் கூட ஓர் ஒழுங்கு முறை - சட்ட நியாயப்படுத்தல் - அடிப்படையாக இருக்க வேண்டும் என்பது உயர்நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பினால் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா கொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்கு கொழும்பு ட்ரயல் அட் பார் நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டில் 2 -1 ஆகப் பிரிந்து வழங்கிய மரண தண்டனை தீர்ப்பை, பின்னர் மேன்முறையீட்டில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் 2018 ஒக்டோபர் 11ஆம் திகதி ஏகமனதாக உறுதி செய்தது. மேல் நீதிமன்ற (ட்ரயல் அட் பார்) தீர்ப்பின் பிரகாரம் சுமார் ஐந்து வருடங்கள் சிறையில் இருந்த துமிந்த சில்வா 2021 ஆம் ஆண்டு ஜூ ன் 24ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். இந்த மன்னிப்பை ஆட்சேபித்து படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திராவின் மகள் ஹிருணிகா, மனைவி சுமணா மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கஸாலி ஹுசைன் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அதில் மகளான ஹிருணிகாவின் மனு முதல் வழக்காக விசாரிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாடி இருந்தார். அந்த வாதத்தின் அடிப்படையில் இப்போது வரலாற்றுத் திருப்புமுனைத் தீர்ப்பு வெளியாகி உள்ளது.

இதேபோன்று சுமந்திரன் வாதாடிய மற்றொரு வழக்கு - ஜனாதிபதியின் பொது மன்னிப்பு விடுதலைக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு - சுமந்திரனின் வாதட்டத்தோடு தற்போது நிலுவையில் உள்ளது. தமிழர்களைப் பொறுத்தவரை அது மிக முக்கியமான வழக்கு.

மிருசுவிலில் சிறார்கள் உட்பட எட்டுப் பேரை படுகொலை செய்த வழக்கில் இலங்கை இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயக்காவுக்கு ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தினால் ஏகமனதாக வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பு, பின்னர் மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தினாலும் ஏகமனதாக உறுதி செய்யப்பட்ட நிலையில், சுனில் ரத்னாயக்காவுக்கு பொது மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அந்தப் பொது மன்னிப்புக்கு எதிராக தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையும் நிலுவையில் உள்ளது.

கோவிட் நெருக்கடிக்கு மத்தியில் அந்த வழக்கை சட்டத்தரணி சயந்தன் இணைய வழியில் தாக்கல் செய்திருந்தார். சுமந்திரன் அதற்காக முன்னிலையாகி வாதாடியிருக்கின்றார். துமிந்த சில்வாவுக்கு எதிரான வழக்குக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட சுனில் ரத்னாயக்காவுக்கு எதிரான அந்த வழக்கு இன்னும் விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான ஆராய்வு முடியாத கட்டத்தில் நிலுவையில் உள்ளது.

உயர்நீதிமன்றம் இப்போது துமிந்த சில்வாவின் வழக்கில் வழங்கிய தீர்ப்பு சுனில் ரத்னாயக்காவுக்கு எதிரான வழக்கில் முன்மாதிரியான வழிகாட்டல் தீர்ப்பாக இருக்கும் என்று நம்பலாம். எதிர்பார்க்கலாம்.



# யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி நல்லூரில் விசேட பூஜை வழிபாடுகள்

(எஸ்.நிதர்ஷன்)

பொலிஸாரின் யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் இன்று விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப் புரைக்கிணங்க போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டமாகிய யுக்திய நடவடிக்கை பொலிஸாரால் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் போதைப்பொருள் கடத்துபவர் கள் எனப் பலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வரும் நிலையில், இன்று யுக்திய நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழி பாடுகள் நடைபெற்றன.

இந்த விசேட பூஜை வழிபாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட அத்தியட்சகர், யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.















# அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் சான்றிதழ்!

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பயிற்சி கலா சாலையில் பயிற்சி, பரீட்சையிலும் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் அதன் முதல்வர் அன்வர் சதாத் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவர்கள் 2017,18,19,20 ஆண்டுகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.







# அம்பாறை மாவட்ட வயல்களின் அவலம்!

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அதிக விளைச்சலுடன் காணப்பட்ட நிலங்கள் அழிவடைந்துள்ளன.

மாவட்டத்தில் கடந்த ஐந்து நாள்களாகக் கால நிலை சீராகக் காணப்படுகிறது. மக்கள் வழமையான நிலைக்குத் திரும்பி வருகின்றனர்.

பெரும்பாலான வீதிகளில் வெள்ளம் வடிந்து காணப்படுகின்றன. இருந்தபோதிலும் தாழ் நில பிரதேசங்களில் இன்னமும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.பெரும்பாலான வயல் நிலங்களில் வெள்ளம் இன்னும் உள்ளதால் அவற்றைக் கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.



# யாழ். பொம்மைவெளி கிராமத்தில் பொங்கல் கொண்டாடிய மெசிடோ!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் உள்ள வசந்தபுரம் பொம்மைவெளி கிராமத்தில் உள்ள சிறுவர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

வசந்தபுரம் கிராமத்தின் பங்கு தந்தை ஜோன் போல் தலைமையில் அண்ணா சனசமூக நிலையத்தில் இது நடைபெற்றது.

வசந்தபுரம் பொம்மை வெளி கிராமமானது மிகவும் பின்தங்கிய நிலையில் பல சவால்களுக்கு மத்தியில் வாழும் குடும்பங்களே உள்ளனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள சிறுவர்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் பொங்கல் நிகழ்வை கொண்டாடுவதற்கு இந்தக் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்கள், கிராமத்தில் உள்ள பொது மக்கள் மற்றும் சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை பொரலுகந்த விகாரையில் தைப்பொங்கல்!

**(அப்துல்சலாம் யாசீம்)**

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் விதத்தில் திருகோணமலை பொரலுகந்த ரஜமஹா விகாரையில் தைப்பொங்கல் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை நிலாவெளி வீதியிலுள்ள பெரிய குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமஹா விகாரையின் விகாராதிபதி சுகிதவங்ச திஸ்ஸ தேரர் இன ஒற்றுமையை வலுவூட்டும் விதத்தில் விகாரைக்கு அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று பொங்கல் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.



கடந்த காலங்களில் இந்த விகாரையை நிர்மாணிக்கும் காலகட்டத்தில் பல எதிர்ப்புகள் இருந்த போதிலும் அந்த இடத் திலேயே விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பெரும்போக அறுவடை ஆரம்பம்; விளைச்சலில் பாரியளவில் வீழ்ச்சி!

(ஹஸ்பர்)

ஒரு சில பிரதேசங்களில் தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம் பெற்று வருகின்றது.

தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியின் பத்தினிபுரம் கிராமத்தில் இயந்திரம் மூலமான அறுவடை இடம்பெற்று வருகிறது.

இந்தப் பகுதியின் நீர் நாவல் மொட்டை வயல் நிலப் பகுதிகளில் அதிகளவான அறுவடை இடம் பெற்றாலும் விளைச்சல் குறைவு என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதிகளவான நோய் தாக்கம், பசளை கிருமி நாசினி விலைகளின் அதிகரிப்பு, சீரற்ற கால நிலை காரணமாக விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் கவலை தெரிவிக்கின்றனர். ஒரு நெல் மூடை 6000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.



ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 12 வரை மூடைகளே கிடைக்கப் பெறும் நிலையில் வெட்டு கூலிக்கு ஏக்கருக்கு 15000 ரூபாவரை செல்கிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை வெள்ள நீர் வேளாண்மையைமிகவும் பாதித்துள்ளத என்றும் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளாகிய எங்களுக்கு நஷ்ட ஈட்டை பெற்றுத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வவுனியாவில் கௌரவிப்பு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வவுனியா அல் ஹிஜ்ரா பாலர் பாடசாலை மற்றும் அல்-பலாஹ் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த முன்பள்ளி சிறார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் முதியோர் மற்றும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான ஞாபகச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் வவுனியா அல் ஹிஜ்ரா முன்பள்ளி பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்றன.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் கலந்து கொண்டார்.





# சங்கானை பிரதேச செயலகத்தில் பொங்கல் விழா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சங்கானை பிரதேச செயலகத்தில் இன்று பொங்கல் விழா நடைபெற்றது.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சம்பிரதாயபூர்வமாகப் பொங்கல் பொங்கி சூரியனுக்கு நன்றி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக உத்தியோகத்தர்களிடையே பராம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.













# மட்டுவில் சாதனையாளர் கௌரவிப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தால், சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் கே.சஜிதரன் தலைமையில், சாவகச்சேரி லவ்லி கூல்பார் முன்றிலில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விருந்தினர்களாக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி மற்றும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக சாதனையாளருக்கான கௌரவம் மற்றும் ஊக்கத் தொகையை இதன் போது வழங்கினர்.

மட்டுவிலைச் சேர்ந்த 60 வயதான திருச்செல்வம் தைப்பொங்கல் தினத்தன்று 1550 கிலோ எடை கொண்ட வாகனத்தை தனது தலை முடியின் பலத்தால் 19 நிமிடங்களில் 1500 மீற்றர் தூரம் இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது சாதனையை நிலைநாட்டினார். இந்த நிலையில் தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக இந்தக் கௌரவம் வழங்கியது.

# கஞ்சி கொடுத்து மயக்கி நகைகள் அபகரிப்பு!

## அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

கண்டியில் இனந்தெரியாத பெண் ஒருவர் இலைக் கஞ்சியில் மயக்கமடையும் மருந்தைக் கலந்து கொடுத்து நகையைத் திருடி வருகிறார் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கஞ்சி குடித்தவுடன் தாங்கள் மயங்கிவிட்டனர் என்றும் எழுந்து பார்க்கும் போது தமது நகைகளை காணவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.





கண்டி தேசிய வைத்திய சாலையின் இருதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தனது கணவரை பார்ப்பதற்காக வந்த பெண், நோயாளிகளை பார்க்க அனுமதிக்கும் நேரம் வரும் வரை அங்கு காத்திருந்துள்ளார்.

இந்த நிலையில் அங்கு இருந்த மற்றொரு பெண்ணிடம் பேசி நட்பாகி கொண்டு வந்த கஞ்சியை குடிக்க கொடுத்துள்ளார்.

அதனைக் குடித்த பெண் மயங்கி விழுந்துள்ளார். பின்னர் சுயநினைவுக்குத் திரும்பிய போது, தங்க நகைகள் மற்றும் பணம் காணாமல் போயிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கண்டி தலைமையக பொலிஸாரின் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சீனன்கோட்டை இரத்தினக்கல் ஆபரணங்கள் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சி கடந்த மூன்று தினங்களாக பெந்தோட்ட பீச் ஹோட்டலில் இடம் பெற்றது.

இந்தக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணிக்கக்கல் வர்த்தகர்கள் மற்றும் ஆர்வலகர்கள் கலந்து கொண்டனர்.



# வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

(த.சுபேசன்)

வட்டுக்கோட்டை அராலி மத்தி குமுக்கண் குள வீதியின் புனரமைக்கப்பட வேண்டிய தேவைப் பாடுடைய எஞ்சிய பகுதியையும் புனரமைத்து உதவுமாறு கிராம மக்கள் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைச் செயலாளரிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள கோரிக்கை கடிதத்தில்,

குமுக்கண் குள வீதி கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்பட்ட போதிலும் மேலும் 75 மீற்றர் தூரம் வீதி புனரமைக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது.

வீதியின் புனரமைக்கப்படாத பகுதியும் புனரமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இன்றுவரை அந்த எஞ்சிய பகுதி புனரமைக்கப்படவில்லை.

இதனால் மழை காலத்தில் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்ய மிகவும் சிரமப்படுகின்றனர். அராலி மத்தி கிராம மக்களின் பிரதான வீதியாக குமுக்கண் குள வீதி காணப்படுகிறது. இதனால் வீதியின் எஞ்சிய பகுதியையும் புனரமைத்து உதவுங்கள் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# 1500 மாணவருக்கு கொப்பிகள் சம்மாந்துறையில் வழங்கப்பட்டன

(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பொது சமூக சேவைகள் அமைப்பால் வருடாந்தோறும் இடம்பெறும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இவ் வருடம் 1500 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக 500 மாணவர்களுக்கான புத்தகங்கள் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்க தெரிவு செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொது சமூக சேவைகள் அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச வாரியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் கழகங்களின், அமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் தொற்று நோய் பரவும் நிலை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயம் தோன்றியுள்ளது. பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

தொடச்சியாக பெய்த மழையாலும், டீ.எஸ்.சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் கரையோரப் பிரதேசங்களில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர் வீடுகளிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

தற்போது மழை வீழ்ச்சி குறைந்துள்ள நிலையில் தேங்கியுள்ள வெள்ள நீர் சுகாதாரமற்றுக் காணப்படுவதால் இந்த நீரில் நடமாடுவதையும், சிறு பிள்ளைகள் நீராடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் பெற்றோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டம், தோல் நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும்,கொதித்தாறிய நீரை பருகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான காய்ச்சல் இருந்தால் வைத்தியர்களை நாடுமாறும் வைத்திய கலாநிதி சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

## சிராவயல் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி:

# மாடு முட்டியதில் சிறுவன் உட்பட 2 பார்வையாளர்கள் உயிரிழப்பு



உலகப் புகழ் பெற்ற சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் நடக்கும் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியில் மாடு முட்டியதில் சிறுவன் உட்பட 2 பார்வையாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே சிராவயலில் ஆண்டுதோறும் தை 3 ஆம் நாள் பாரம்பரியமாக மஞ்சுவிரட்டு நடத்தப்படுகிறது. இந்த மஞ்சுவிரட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்கும்.

சிராவயல் மஞ்சுவிரட்டு, சிராவயல் கிராமத்தில் இன்றையதினம் சிறப்பாக நடைபெறுகிறது. இம்மஞ்சுவிரட்டு விழாவில் பங்கேற்பதற்கென அரசின் அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளுக்கும் உட்படுத்தப்பட்டு, பல்வேறுப் பகுதிகளிலிருந்து 272 காளைகளும், 81 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

மேலும், இப்பணியில் 8 மருத்துவக் குழுக்களும், சுமார் 1,000 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், மஞ்சுவிரட்டில் மாடுகளை அவிழ்த்துவிட்டப்போது எதிர்பாராத விதமாக மாடு முட்டி வலையபட்டியைச் சேர்ந்த பாஸ்கரன் ராகுல் (வயது 12) என்ற சிறுவன் உயிரிழந்தார்.

மேலும் 35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அவரது அடையாளம் இன்னும் அறியப்படவில்லை. சிராவயல் மஞ்சுவிரட்டில் இதுபோல் உயிரிழப்புகள் நேர்வது தொடர்கதையாகவே உள்ளது.

# இலங்கையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க இரு தரப்பு பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும்

## - அன்புமணி வலியுறுத்தல்

”இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 40 பேரையும், அவர்களின் படகுகளையும் மீட்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இலங்கை மற்றும் தமிழ்நாட்டு மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இரு நாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.”

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில்,

“வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 28 பேரை 24 மணி நேரத்தில் சிங்களக்கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். நாகை மாவட்ட அக்கரைப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் கோடியக்கரைக்கு அருகில் இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். பொங்கல் நாள் இரவில் அவர்களை சுற்றிவளைத்து கைது செய்த சிங்களக் கடற்படை அவர்களுக்கு சொந்தமான படகையும் பறிமுதல் செய்திருக்கிறது. அதேபோல், பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 2 படகுகளுடன் மீன் பிடிக்கச் சென்ற 18



மீனவர்களையும் சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. இரு கைது நடவடிக்கைகளும் இந்திய கடல் எல்லையில் நிகழ்ந்துள்ளன. இலங்கைப் படையின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்களை சிங்களக் கடற்படை கடந்த 13 ஆம் திகதி கைது செய்திருந்தது. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பா.ம.க. அன்றே வலியுறுத்தியிருந்தது.

அடுத்த நாள் இது தொடர்பாக மத்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதினார். அதே நாளில் கோடியக்கரை அருகில் 10 மீனவர்களும், அடுத்த நாள் கச்சதீவு அருகில் 18 மீனவர்களும் கைது செய்யப்பட்டிருப்பதில் இருந்தே தமிழக அரசின் எதிர்ப்பை இலங்கை அரசு பொருட்படுத்தவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. பொங்கல் திருநாள் என்றும் பாராமல் தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்வதை மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

இலங்கையின் மீன்பிடி உரிமையில் தமிழக மீனவர்கள் பங்கு கேட்கவில்லை. தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்த பகுதிகளில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்பது தான் தமிழ்நாட்டின் கோரிக்கை ஆகும்.

இந்த நியாயமான கோரிக்கைக்குக் கூட இலங்கை அரசு செவிசாய்க்க மறுக்கிறது. இந்த சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய மத்திய அரசும் இந்த சிக்கலை கடந்த பல பத்தாண்டுகளாக வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறது.

இந்த சிக்கலுக்கு தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை மற்றும் தமிழ்நாட்டு மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இரு நாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு முன்பாக இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 40 பேரையும், அவர்களின் படகுகளையும் மீட்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

# பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்!



பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டுள்ளது. ஜெய்ஷ் அல்-அட்ல் என்ற தீவிரவாத அமைப்பை குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. இதில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

மூன்று பேர் காயமடைந்துள்ளனர் என பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில் பாகிஸ்தான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டுள்ளது பதற்றத்தை கூட்டியுள்ளது.

அண்மையில் ஈராக், சிரியா மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டிருந்தது. இந்த சூழலில் பாகிஸ்தானை இப்போது தாக்கியுள்ளது. முன்னதாக, இம்மாத தொடக்கத்தில் ஈரானில் நடந்த காசிம் சுலைமானி நினைவேந்தல் நிகழ்வில் நடந்த குண்டு வெடிப்பில் 80 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப் பேற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் நடந்த தாக்குதல்களில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாக ஈரான் நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தின் மலைப்பகுதியில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான் – பாகிஸ்தான் எல்லையை அண்மித்துள்ள பாகிஸ்தான் பகுதியில் சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் தாக்குதல் நடந்துள்ளது. ஜெய்ஷ் அல்-அட்ல் தீவிரவாத அமைப்பு கடந்த 2012 இல் நிறுவப்பட்டது. எல்லைப் பகுதியில் பணியாற்றும் ஈரான் பொலிஸாரை கடந்த காலங்களில் இவர்கள் கடத்தியுள்ளனர் என குற்றஞ் சாட்டப்படுகிறது .

# கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்: ஈரானுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை

பாகிஸ்தானைக் குறிவைத்து ஈரான் நடத்திய தாக்குதலில் பாலோசிஸ்தான் பகுதியில் இருவர் உயிரிழந்த நிலையில், கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் அரசானது, ஈரானின் தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர். மூன்று சிறுமிகள் காயமடைந்தனர் என்று தெரிவித் துள்ளதோடு கடும் கண்டனங்களையும் பதிவு செய்துள்ளது.



இந்தத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில்,

“ஈரான் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இது எங்கள் வான் வெளியில் நடத்தப்பட்ட அத்துமீறல். இந்தத் தாக்குதல் அப்பாவிக் குழந்தைகள் இருவர் இறந்துள்ளனர். சிறுமிகள் காயமடைந்துள்ளனர். இது சிறிதும் ஏற்க முடியாதது. இதற்கு கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்” என்று எச்சரித்துள்ளார்.

இருப்பினும் அந்த அறிக்கையில் தாக்குதல் நடைபெற்ற இடம் பற்றிய விவரமோ என்ன மாதிரியான தாக்குதல் என்பதைப் பற்றியோ விவரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

# சீன மக்கள் தொகையில் மீண்டும் சரிவு!



சீனாவின் மக்கள்தொகை 2023 ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகக் குறைந்துள்ளது. கடந்த ஆண்டின் தொடக்கத்தில், 142.57 கோடியாக இருந்த மக்கள் தொகை தற்போது 140.9 கோடியாக உள்ளது.

குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் கொவிட்-19 இறப்புகளின் அலை காரணமாக சீனாவின் மக்கள்தொகை 2023 இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகக் குறைந்துள்ளது, இது தொடர்பாக நாட்டின் தேசிய புள்ளிவிவ ரங்கள் துறை அதிகாரபூர்வ அறிக்கை வெளியிட்டுள்ளது. பிறப்பு விகிதத்தை அதிகரிக்க சீன அரசு ஏராளமான முயற் சிகளை மேற்கொண்டும் இந்த சரிவை தடுக்க இயலவில்லை.

கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து உலக மக்கள் தொகையில் முன்னி லையில் இருந்து வந்த சீனா, 2022ஆம் ஆண்டு கொரோனா தொற்றுக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் மக்களை இழந்தது.

இதனால் 1960 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக சீன மக்கள் தொகை கணிசமான அளவு குறைந்தது.

கடந்த ஆண்டு மக்கள் தொகையில் சீனாவை பின்னுக்குத் தள்ளி உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா விளங்குவது குறிப்பிடத்தக்கது.